பட்டு இப்பணிகள் தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பணிகள் அனைத்தும் விரைவாக நடைபெற்று வருகின்றன.

திருமதி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கணவர் திரு. ரவிக்குமார் அவர்களின் தொகுதியில், குறையாக நின்று கொண்டிருக்கும் இந்தப் பாலம் எங்களது இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில், நிறைவுபெறும் என்பதை, அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், என் கணவரின் சார்பாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 190, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர்.

190—

மேட்டூர் தொகுதியிலுள்ள ஊர்களுக்கு ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கல்.

*9064—திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேட்டூர் தொகுதியில் நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், வனவாசிப் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீண்டகாலமாக உள்ளதால் ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இணைப்பு வழங்கி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மேட்டூர் தொகுதியில் நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், வனவாசி பகுதிகளுக்கு மேட்டூருக்கு அருகில் காவிரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்பொழுது நிதிநிலைமை சரியில்லாததால் 1993-ம் ஆண்டு வரையில் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-40

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியைச் சார்ந்த நங்கவள்ளி ஜலகண்டாபுரம், வனவாசிப் பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் தட்டுப்பாடு காரணமாக மிகவும் கஷ்டப்படுகிறார்கள்,

1993 மார்ச் 31]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம் அடுத்த ஆண்டு முடிவு அடையும் நிலையில் உள்ளது என்று தெரிவிக்கிற காரணத்தினால், இந்தத் திட்டத்தின் மூலம் இப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன். இல்லையேல், மாற்றுக் குடிநீர் திட்டம் அமைத்து இப்பகுதிகளில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில் நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், வனவாசிப் பகுதிகளுக்கு ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இணைப்பு வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. உலக வங்கியும் இதற்கு ஒத்துக் கொள்ளாது என்றும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. எனவே, மாற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டது. இத் திட்டத்தில் பி.என்.பட்டி, விரக்கல்புதூர் போன்ற 5 பேரூராட்சிகளுக்கும் நங்கவள்ளி, தாரமங்கலம், மேச்சேரி, ஓமலூர் கடையான்பட்டி ஒன்றியங்களில் உள்ள 2,016 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. நிதிநிலைக்கேற்ப அவசர அவசியங்களுக்கேற்ப இத்திட்டத்தை 1993-94 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டு, எந்த ஆண்டு முடிவு அடையும் என்பதையும், இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு தொகை எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நிதிநிலைக்கேற்ப, அவசர அவசியங்களுக்கேற்ப 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலித்து வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தினால் பல்வேறு நிலைகளில் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 191, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.